செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 176 நாள்: 27/03/17

# பத்திரிக்கை செய்தி

வேலூர் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் எருது விடும் விழா பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன. மேலும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் எருது விடும் விழா நடத்திட அனுமதி கோரி மனுக்களும் வரப்பெற்றுள்ளன. எருது விடும் விழா என்பது கிராமத்தில் பாரம்பரியமாக உள்ளூர் மாடுகளை கொண்டு நடத்தப்படும் விழாவாகும். இதற்கு மதிப்பளித்தே தமிழக அரசு இவ்வாண்டு எருது விடும் விழா நடத்த அனுமதி அளித்துள்ளது. ஆனால் எருது விடும் விழாவின் போது சமீப காலங்களில் விழாக்குழுவினர் வெளியூரிலிருந்து எருதுகளை வரவழைத்து அதன் உரிமையாளர்களிடம் அனுமதி கட்டணம் என்ற பெயரில் குறிப்பிட்ட தொகையை வசூலித்து பரிசு தொகை வழங்குவதாக அறிவிப்பதால் பாரம்பரியமாக நடத்த வேண்டிய போட்டி அதனுடைய தன்மையை இழந்துவிடுகிறது. எனவே எதிர்வரும் மாதங்களில் எருது விடும் விழா நடத்த உத்தேசித்துள்ளோர் பரிசுத் தொகை ஏதுமின்றி பாரம்பரியமாக நடத்தப்படும் விழாவாக உள்ளூர் மாடுகளை கொண்டு சட்டத்திட்டங்களை மதித்து விழா நடத்திட அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் எதிர்வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் எருது விடும் விழாக்களை காலை 9.30 மணிக்கு தொடங்கி 12.00 மணிக்குள் முடிக்க வேண்டும் எனவும் இதனை மீறி செயல்படுவோர் மீது காவல் துறையினர் மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் அறிவிக்கின்றார்.

ஒம்/-சி.அ.ராமன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர்.

/உத்தரவுபடி/

27/3/17
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.

அலுவலக மேலாளர் (நீதியியல்)
27/3/17